[1978 ஏப்ரல் 1

Selection Grade for Tamil Pandits

*238 Q. THIRU. K. S. MANI (on behalf of THIRU. M. SANKARALINGAM & THIRU D. SANTOSHAM) Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether the Government have received any representation from the Tamil Pandits Association stating that while granting Selection Grade to Tamil Pandits, the total period of services rendered by them should be taken into account and not the period of services rendered as First Grade Tamil Pandits alone; and

(b) if so, the action taken thereon?

தமிழாசிரியர்களுக்கு தேர்வுத் தரம்.

திரு. கோ. சி. மணி (திரு. எம். சங்கரலிங்கம் மற்றும் திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தமிழாசிரியர்களுக்குத் தேர்வுத் தரம் வழங்கப்படு கிறபோது, அவர்கள் பணிபுரிந்த மொத்த பணிக்காலத்தை யும் கணக்கிட வேண்டுமென்றும், முதல் நிலைத் தமிழா சிரியராக பணிபுரிந்த காலத்தை மட்டும் கணக்கிடக் கூடாது என்றும், தமிழாசிரியர் கழகத்திடமிருந்து அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

திரு. க. அறிவழகன் : தமிழாசிரியர்களும், மற்ற ஆசிரியர் களும் ஆசிரியர்களாகப் பணிபுரிந்த காலத்தை, தேர்வு நிலை வழங்குவதற்கு கணக்கிட்டுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக, தமிழாசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் முழுத் தகுதி பெற்று, இரண் டாம் நிலைத் தமிழாசிரியர்களாக, துரதிருஷ்டவசமாகப் பணி யாற்றினார்கள். அவர்களுக்கு முழுத் தகுதி இருந்தால்தான், முதல் தரம் தரப்படுகிறது. எனவே அவர்கள் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாகப் பணியாற்றிய காலத்தையும் தேர்வுநிலை அளிப்பதற்கு முக்கியமாகக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது பற்றிய கேள்வி இது. அரசு இதை கருணைகூர்ந்து மீண்டும் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களுக்கும் தேர்வு நிலை ஊதியம் தரப்படுகிற காரணத்தால், இதுபற்றி மேற்கொண்டு ஆராயத் தேவை யில்லை என்று அரசு கருதுகிறது.